**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் மற்றும் 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட ஒட்டகச் சிலை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,890,415 ஆக மீள்மதிப்பீடு செய்து, ரூபா 2,740,415 ஆன மீள்மதிப்பீட்டு மிகை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த ஒட்டகச் சிலை சனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒட்டகச் சிலையின் பெறுமதியான ரூபா 2,890,415 மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக வருமான செலவினக் கணக்கில் வரவு | நாட்குறிப்புக்களின் மூலம் உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் திரண்ட நிதியம் மூலம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,890,415 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் மதிப்பீட்டு ஒதுக்க நிதியம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கின்ற வங்கி நிறுவனத்தால் நிறுத்தி வைத்தல் கழிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் வைப்பாளர்களுக்கு நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ் விநியோகிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,895,651 நிறுத்தி வைத்தல் வரிக்காக நிதியத்தால் நிறுத்தி வைத்தல் கழித்தல் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் வரிக்குரிய வரிச் சான்றிதழ் உரிய வங்கியில் இருந்து வழங்கப்படாதிருந்ததுடன் உரிய வங்கியில் இருந்து அந்த வரிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்தல் வைத்தல் வரிக்குரிய வரிச் சான்றிதழ் உரிய வங்கியிடம் இருந்து தாமதமின்றி பெறப்படல் வேண்டும். |
| (இ) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய இலக்கம் அமப/17/2287/703/085 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தேசிய பாதுகாப்பு நிதியத்தை வருமான வரியில் இருந்து விலக்களிப்பதற்கு ஏற்பாடுகள் இல்லாதிருந்ததாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தால் வருமான வரி செயற்பாடுகளுக்கு இணங்குகின்ற வகையில் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் கணக்குகள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியம் படைவீரர் நலன்புரி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் நிதிய வருமானத்தை வரிகளில் இருந்து விலக்களிக்கும் இயலுமை தொடர்பாக கவனத்தில் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்த சட்டத்தின் பிரகாரம் வரி அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், வரிச் செயற்பாடுகளுக்கு இணங்குகின்ற வகையில் கணக்குகள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) | நியதிச் சட்ட நிதியமொன்று எதிர்வரும் ஆண்டிற்கான பாதீடு, அந்த நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரித்து உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் நடப்பாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் | பாதீடு குறித்துரைத்த திகதியில் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆண்டிற்கான நிதியத்தின் பாதீடு 57 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2023 நவம்பர் 27 ஆந் திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |

**1.7 முதலீட்டு முகாமைத்துவம்**

| காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 செப்தெம்பர் 02 ஆந் திகதி ரூபா 10.4 மில்லியன் நிலையான வைப்பு ஒன்றை மாற்றியதால் சேமிக்கப்பட்ட ரூபா 3.1 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டதுடன் அந்த மிகைப் பணத்தை குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றப்பட்டு பெறப்பட்ட பணம் குறைவாக பயன்படுத்தபடாமல் ஆக்கபூர்வமான முதலீடுகளுக்காக பயன்படுத்தப்படும் என குறிப்பிடுகின்றோம். | மிகைப் பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 69,946,544 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 40,365,301 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 29,581,243 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 53,799,919 இனால் அதாவது 40.65 சதவீதத்தால் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | “மெத்செவன” வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டின் போது படைவீரர்களின் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட 145 வீடுகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 138.33 மில்லியன் உதவித் தொகை 03 தவணைகளின் கீழ் செலுத்துவதற்காக திட்டமிடப்பட்ட போதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 136 வீட்டு நலனாளிகளுக்கு ரூபா 43 மில்லியன் ஆன முதலாவது தவணைப் பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்ட தொகையில் 31 சதவீதம் அளவில் செலுத்தியதன் காரணமாக இது தொடர்பாக போதியளவான செயலாற்றல் பெறப்பட்டிருக்க வில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மெத்செவன அரைவாசி வீடுகள் செயற்திட்டத்திற்குரியதாக கவனத்தில் கொள்ளப்படுகின்ற கணக்காண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பகுதிகள் அந்த ஆண்டிலேயே பூர்த்தி செய்வதற்கும் மற்றும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து பூர்த்தி செய்வதற்கும் செயல் முன்னேற்றத்தை மீளாய்வுக் கூட்டத்தின் போது முப்படைகளுக்கும், பொலிசிற்குரிய நலன்புரி பிரிவு மற்றும் செயற்திட்டத்திற்கு உரிய மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அந்தந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் நிர்வாக சபை 2023 நவம்பர் 17 ஆந் திகதி கூடியதன் பின்னர் 2024 ஆம் ஆண்டில் கூடப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக நிதியத்தின் 2024 ஆம் ஆண்டின் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள், நிர்வாக சபைக் கூட்டத்திற்கு நடாத்தப்பட்டமையும் உறுதிப்படுத்தப்படவில்லை. | சனாபதியினால் புதிய அங்கத்தவர் நியமிக்கப்பட்ட பின்னர் நிர்வாக சபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டின் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்கிய மேவுகை அங்கீகாரம் மேற்கொண்டு சகல செயற்பாடுகளும் நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் என அறியத்தருகின்றோம். | பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் நிதிக் கூற்றுக்கள் நிர்வாக சபை கூட்டங்களுக்காக சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 3.2 நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு

| காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பாதுகாப்பு நிதியத்தின் முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளின் பிரகாரம் நிதியத்தால் 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான 07 வருட காலத்தில் தொடர்ச்சியாக பற்றாக்குறை ஒன்று அறிக்கையிடப்பட்டிருந்தமையால் நிதியத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 1,023.45 மில்லியன் முதல் ரூபா 726 மில்லியன் வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் ஒவ்வொரு ஆண்டிலும் வருமானத்தை விஞ்சிய செலவினத்தை நிதியீட்டம் செய்வதற்காக வருடாந்தம் நிலையான வைப்புக்கள் மாற்றப்பட்டிருந்தது. இந்த நிலைமை நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | 2025 ஆம் ஆண்டின் பற்றாக்குறை இன்றி நிதியத்தை பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதியத்தின் பாதீட்டு கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் 2018 முதல் 2023 வரையான ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2017 ஆம் ஆண்டு வரை தேசிய பாதுகாப்பு நிதியம், நிதி அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன் அதுவரை அறிக்கைகள் அந்த அமைச்சினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமையால் அந்த 2017 ஆம் ஆண்டையும் உள்ளடக்கி 2023 ஆம் ஆண்டு வரையான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |